**பாலு. சரவணசர்மா**
புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு, சென்னை 600 045

ௐ

தொலைபேசி/நகலி : 2226 1742
கைத்தொலைபேசி : 98403 69677
மின்அஞ்சல் முகவரி : prohithar@yahoo.com
இணைய தளம் : www.prohithar.com

புரோகிதர் துணையின்றி

# தலை வாசல்  பூஜை செய்யும் முறை

- பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும், 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- பட்டியலில் உள்ள அணைத்து பொருட்களும் தேவை
- பட்டியலையும்  வாங்கிய  பொருட்களையும்  ஒப்பிட்டு  சரி பார்க்கவும்
- குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய  நன்கு திட்டமிடவும்
- திருஷ்டி பரிகாரம் சுற்றி உடைக்க கட்டிட  தொழிலாளி குளித்து  திருநீறு  பூசியவர்  தேவை. பாதசாரி, வாகன ஒட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு பூசணியை **நடு சாலையில் உடைக்ககூடாது** என்று வலியுறுத்தவும்
- பூஜையின் பொழுது  பாரம்பரிய கலாசார ஆடை உடுத்தவும்
- புத்துணர்ச்சிக்காக காரம், இனிப்பு,  காபி அல்லது  டீ  ஏற்பாடு
- பழங்களை பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலையில் அல்லது குளிர் பதனியில் வைக்கவும்
- 5 சுமங்கலிகள் தேவை ( மரியாதை தாம்பூலம்  சிவப்பு ரவிக்கை துணி அல்லது 11ரூபாய்)
- கடப்பாரை, மம்மட்டி, பாண்டு ஆகியவற்றுடன் மேஸ்திரி 1 மணி நேரம் முன்னதாக வருகை தரவேண்டும்
- காமாட்சி விளக்கு காற்று அடித்தால் அணையாமல் ஒளிர்விட குண்டு பாத்திரம் (1 படி அளவு) தேவை
- சுமார் 30 லிட்டர் தண்ணீர் தேவை

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100gm |
| தரமான குங்குமம் | 50gm |
| மஞ்சள்கொம்பு | 50gm |
| குண்டு மஞ்சள் | 50gm |
| விபூதி சிறிய | Pkt 1 |
| பன்னீர் புட்டி | 50ml |
| சந்தனம் | 10gm |
| நவதான்யம் கலப்பு | 50gm |
| கட்டி கற்பூரம் | 20gm |
| ஊதுபத்தி | 1Pkt |
| * தரமான சாம்பிரானி | 10gm |
| * ஓமத்திரவியம் | Spl |
| * அரசன் சுள்ளி | 1 கட்டு |
| நெய் | 100 gm |
| நல்லெண்ணெய் | 100gm |
| திரிநூல் | 1கட்டு |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 25gm |
| சுன்னாம்பு | சிறியது |
| தீப்பெட்டி | 2 |
| வெல்லம் | 100gm |
| பாக்கு தொன்னை | 1 டஜன் |
| ப்ளேடு | 1 |
| நாட்டுச்சர்க்கரை | 50gm |
| அவல், பொரி, கடலை | 50gm |
| கோலமாவு | 50 gm |

## இதர பொருட்கள்

| | |
|---|---|
| வாழை இலை | 3 |
| வாழை பழம் | 12 |
| கல்யாண பூசனி | 1 |
| எலுமிச்சை பழம் | 4 |
| பழங்கள் 5 வகை | தலா 1 |
| உரித்த தேங்காய் | 2 |
| பச்சரிசி | 1 Kg |

பால் 100மில்லி   தயிர் 100 மில்லி

## பசுவிற்கு தானம்

| | |
|---|---|
| வெல்லம் | ½ Kg |
| கோதுமை தவிடு | 2 Kg |

## பூ வகையறா

| | |
|---|---|
| வாசல் மாலை | 1 |
| பூச்சரம் | 5 முழம் |

உதிரிப்பூக்கள்
அருகன் புல், **மா இலை கொத்து**

பிள்ளையார் துண்டு   1
ரவிக்கை துணி ( தலை வாசல் )
கருப்பு, வெள்ளை, சிவப்பு

**நகை கடையில்**
நவரத்தினம்
பஞ்சலோகம்
தங்க, வெள்ளிகாசு

## வீட்டிலிருந்து

பெரிய பித்தளை சொம்பு   1
காமாட்சி விளக்கு
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம் உத்திரனி
தாம்பாள தட்டு 3
பேசின் 2, சிறிய கப் 5
மர மணை 3 , மணை மேல் துணி
எண்ணெய் புட்டி
பழைய செய்தி தாள் 10
கைதுடைக்க பழைய துணி
கோணி1
கத்திரிக்கோல், சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி
கம்பி ஆணி 3 (வாசற்படிக்கு)
பக்கெட் 1
எமர்ஜென்சி லைட் 1, டார்ச்லைட்
ஜமக்காளம், பாய்
குடை
**குடி நீர் / டம்பளார்**

வருகை தரும் சுமங்கலிகளுக்கு தாம்பூலம் மரியாதை

புகைப்படம் எடுக்க ஏற்ப்பாடு

| | |
|---|---|
| **ஒரு ருபாய் காசு** | **48** |
| **50 காசு** | **9** |

* குறியிட்டவை தூபம் போட மட்டும்

பூஜை முடிந்த பின்னர் மீதம் உள்ள பூஜை பொருட்களை அருகில் உள்ள வருவாய் இல்லாத கோவிலுக்கு தரவும்

# புரோகிதர் துணையின்றி தலை வாசல் பூஜை செய்யும் முறை

முன்னேற்பாடு

அனைத்து பொருட்களையும் பழைய செய்திதாளின் மீது பிரித்து தயார்நிலையில் வைக்கவும்
பூஜையிடத்தில் (கோலத்தின் மீது) பழைய செய்தித்தாளை பரப்பவும் அதன் மேல்...
வடக்கு நுனியாக தலைவாழையிலை போட்டு அதில் அரிசியிடவும்
அரிசியின் மேல் மஞ்சள் பிள்ளையாரை வைக்கவும், அலங்காரம் செய்யவும்
பிள்ளையார் முன்னால் இலை போட்டு அதில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கொம்பு, வெல்லம், இனிப்பு, பழங்கள் ஆகியவற்றை வைக்கவும்
தட்டில் அவல், பொரி, கடலை, நாட்டுச்சர்க்கரை ஆகியவற்றை கலந்து வைக்கவும்
திருஷ்டி பூசனி, திருஷ்டி எலுமிச்சை,திருஷ்டி தேங்காய் ஆகியவற்றை தயார் செய்யவும்
பால், தயிர், பன்னீர் ஆகியவற்றை திறந்து அபிஷேகத்திற்க்கு தயாராக கப்பில் ஊற்றி வைக்கவும்
தலைவாசலை கட்டிடத்தின் உள்புறம் ஈசான்ய பக்கத்தில் வைத்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அபிஷேகத்திற்க்கு தயாராக வைக்கவும்
பொக்கிஷம் இட தலைவாசல் குழி
வாசல்படிக்கு மாவிலை தோரணம் கட்டவும், பூ மாலை சாற்றவும் வசதியாக 3 ஆணிகளை அடிக்கவும்

பூஜை துவக்கம் (குறித்த லக்னத்தில் ஆரம்பிக்கவும்)

காமாட்சி விளக்கில் நெய் ஊற்றி தீபம் ஏற்றவும்
தாய், தகப்பனார், முதலில் எழுத்து கற்றுத்தந்த ஆசிரியர், பிள்ளையார், குலதெய்வம் ஆகியவர்களை மனதில் தியானிக்கவும்
பிள்ளையாருக்கு விநாயகர் அகவல் துணைக்கொண்டு அருகம்புல்லால் அர்ச்சனை செய்யவும்
தேங்காய் உடைத்து தூபம், தீபம் காட்டவும்
பிள்ளையார் முன் கைகளில் பூக்களை வைத்துக்கொண்டு மனதில் இறைவனை தியானித்து விரைவில் கட்டிட பணிகள் முடிந்து குடிபுக வேண்டும் என்றும் கல்வி , அறிவு, செல்வம், தொழில் , சந்ததி மேன்மை அடையவேண்டும் என்று பிராத்தனை செய்து பூக்களை இறைவனின் பாதத்தில் சமர்ப்பிக்கவும்
திருநீரு இட்டுக்கொள்ளவும்

தலை வாசல் அபிஷேகம் (மனதில் குலதெய்வத்தை பிரார்த்தனை செய்து–ஓம் சிவாய நமஹ அல்லது ஓம் நாராயணாய நமஹ என்று உச்சரித்து)

அபிஷேகம் 5 அல்லது ஒற்றைப்படையில் சுமங்கலிகள் ஒன்று சேர்ந்து தலைவாசலுக்கு முறையே
நீர்–பால்–தயிர்–நீர்–சந்தனம் கலந்த பன்னீர் அபிஷேகம்
மஞ்சள்–குங்குமம் இடவும்

தலை வாசல் குழியில்

கோமயம் அல்லது மஞ்சள் நீர் தெளிக்கவும்
சுமங்கலிகள் நவதான்யம், நவரத்தினம், தங்ககாசு, வெள்ளி காசு, பஞ்சலோகம், மஞ்சள் அரிசி இடவும்
வருகை தந்தவர்கள் அனைவரும் நாணயம் 27 அல்லது 45 (கூட்டுத்தொகை 9) இடவும்

வாசல் நிறுத்தம்

சுமங்கலிகள் பிடிக்க தலைவாசலை நிலை நிறுத்தவும்
கொத்தனார் தலைவாசலை மட்டம் பார்த்து நிலை நிறுத்தவும்

வாசல் பூஜை

வாசல்படிக்கு மாவிலை தோரணம் கட்டவும், பூ மாலை சாற்றவும் (முன்னதாகவே 3 ஆணிகளை அடிக்கவும்
கருப்பு, வெள்ளை, சிவப்பு துணி கட்டவும்
தேங்காய் உடைத்து, தீபாராதனை காட்டவும்
சுமங்கலிகள் தீபாராதனையுடன் வாசலை 3 முறை தாண்டவும் (சரஸ்வதி, லட்சுமி, அம்மன் பிரவேசமாக பாவித்து)
வாசற்படியை தொட்டு கும்பிடவும், கண்ணில் ஒற்றிக்கொள்ளவும்
அரசன் சுள்ளியாள் நெருப்பு மூட்டவும், தணலில் ஓமத்திரவியம், சாம்பிராணி இட்டு தூபம் இடவும்

திருஷ்டி

வாசற்படிக்கு பூசனி, தேங்காய், எலுமிச்சை என வரிசைப்படி திருஷ்டி சுற்றவும்

மரியாதை தாம்பூலம்

5 சுமங்கலிகளுக்கு மரியாதை தாம்பூலம்
பெண் கட்டிட தொழிலாளிக்கு மரியாதை தாம்பூலம்
கொத்தனாருக்கு தட்சனை–மரியாதை தாம்பூலம்
அவல்,பொரி, கடலை பிரசாதத்தை அனைவருக்கும் தரவும்

இனிப்புடன் சிற்றுண்டி

மீதம் உள்ள பூஜை பொருட்களை கோவிலில் ஒப்படைத்தல்

**சுபம்**

**7 மார்ச் 2008**